| | | | |
|---|---|---|---|
| Headline | **Medical treatment for Aids** | | |
| Date | **04 Jun 2011** | Language | **Tamil** |
| MediaTitle | **Tamil Nesan** | Page No | **2** |
| Section | **News** | Article Size | **168 cm$^2$** |
| Journalist | **N/A** | Color | **Black/white** |
| Frequency | **Daily** | ADValue | **326** |
| Circ / Read | **45,000 / 124,000** | PRValue | **977** |




## எய்ட்ஸ் என்பது இனி மரண தண்டனை அல்ல!

# அறுவை சிகிச்சை முதல் வெற்றி!

**லண்டன், ஜூன் 4-**

உலகமே கண்டு பயந்து கொண்டிருக்கும் 'எய்ட்ஸ்' நோய்க்கு ஒரு முடிவு காலம் ஏற்படக் கூடிய அறிகுறிகள் வலுப்படத் துவங்கியுள்ளன. திமோதிராய் ப்ரௌன் என்னும் ஜெர்மானியருக்கு விசேட முதுகுத் தண்டு மஜ்ஜை அறுவை சிகிச்சை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மேற் கண்ட எதிர்பார்ப்பு வலுப் பட்டுள்ளது. அவர் ஒரு எச்.ஐ.வி. நோயாளியாக இருந்தார். எய்ட்ஸ் நோய்க்கான புதிய மருந்து, விசேட சிகிச்சைகள் குறித்து அப்போதைக்கப் போது பல செய்திகள் வந்தாலும், வலுவான ஆதாரங்கள் இதுவரை வந்தது இல்லை. ஆனால் மேற்கண்ட முதுகுத்தண்டு மஜ்ஜை அறுவை சிகிச்சை உண்மையிலேயே ஒரு புதிய திருப்புமுனையாக அமைய விருக்கிறது.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் எய்ட்ஸ் நோய் பற்றி மருத்துவ உலகிற்குத் தெரிய வந்தது. அந்நோய் கண்டால் அது ஒரு மரண தண்டனை என இதுநாள்வரை கருதப் பட்டு வந்தது. இந்த முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள், எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த மருந்து கண்டுபிடித்த ஆராய்ச்சியாளர்கள். அந்த மருந்தின் காரண மாகத்தான் உலகம் முழுவதும் 33.3 மில்லியன் எய்ட்ஸ் நோயாளிகள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்க முடிந்திருக் கிறது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் எச.ஐ.வி. நோய்க் காக மட்டும் வருடம் ஒன்றுக்கு 39 மில்லியன் ரிங்கிட் (மூவாயிரத்துத் தொளாயிரம் கோடி) செலவு செய்யப்படுகிறது. 'உலகப் பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டால் மேற்கண்ட செலவைத் தொடர்ந்து சமாளிக்க முடியாது.

இதற்கு நல்ல மாற்றுவழி கண்டாக வேண்டும்.' என்கிறார் நோபல் பரிசு பெற்ற மருத்துவ விஞ்ஞானி ப்ரான்கோய்ஸ் பேரி கின்னோகி.

இவரது ஆதங்கம் பலிதமாகிறது என்பதற்கு திமோதி மீது மேற் கொண்ட அறுவை சிகிச்சையின் முடிவு நல்ல நம்பிக்கை தந்திருக்கிறது. திமோதி பெர்லினில் வாழ்பவர். இவருக்கு எச்.ஐ.வி. நோயுடன், இரத்தப் புற்றுநோயும் இருந்தது. இவர் மரணப் படுக்கையில் கிடந்தார்.

2007இல் இவரது டாக்டர் ஒரு ஆலோசனை தெரிவித் தார். அதன்படி மேற்கண்ட அறுவை சிகிச்சை மேற்கொள் ளப்பட்டது. இப்போது உலகில் எச்.ஐ.வி.யில் இருந்து விடுபட்ட நோயாளியாக திமோதி திகழ்கிறார்.